Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை 50

சுடர்:

செவ்வாய்க்கிழமை 22 ஓகஸ்ட் 2023 ஆவணி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



சாவகச்சேரியில்

## குப்பையுடன் வீசப்பட்ட நகைகள் தொழிலாளர்களால் ஒப்படைப்பு!!

யாழ்ப்பாணம், ஓக. 22

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட மண்டுவில் வட்டாரத்தில் குடியிருப்பாளரால் வீதியில் குப்பைகளோடு வீசப்பட்ட சுமார் பதினைந்து இலட்சம் »11

குருந்தூர்மலையில்

## சிங்களவர்களுக்கு உரிமையில்லை!

வடக்கு – கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெள விமலசாரநாயக்க தேரர் இடித்துரைப்பு

வவுனியா, ஓக. 22

முல்லைத்தீவு குருந்தூர்மலை தொல்பொருள் திணைக்களத்துக்குரியது. இதனைத் தனி ஒரு மதத்தவர்கள் தமக்கானது என்று உரிமை கொண்டாடக்கூடாது. »11

# கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுக்கு நிதி விடுவிப்பு!!!

## நீதி அமைச்சு 5 மில். ரூபா ஒதுக்கியது

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 22

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வுக்கு நிதி விடுவிப்பில் நீண்ட இழுபறியிருந்து வந்த நிலையில் நீதி அமைச்சு அதற்குரிய முதல் கட்ட நிதியை விடுவிக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளது. »11

பூஸா சிறைச்சாலையில்

## கைதிகள் இருவர் திடீரெனச் சாவு!

கொழும்பு, ஓக. 22

காலி பூஸா சிறைச்சாலையில் இரு கைதிகள் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் கராப் »11

## எரிவாயு விலை அதிகரிக்கும்!!

கொழும்பு, ஓக. 22

சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். உலக சந்தையில் »10

## கம்மன்பிலவின் கருத்துக்களால் அடங்கி ஒடுங்கப்போவதில்லை!!

### கஜேந்திரகுமார் சீற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 22

உதயகம்மன்பில போன்றவர்களது இனவாதக் கருத்துக்களால் எம்மை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கி விடமுடியாது. நாம் அவர்களின் இனவாதச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அம்பலப்படுத்துவோம் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். »11

'13'ஐ நடைமுறைப்படுத்தும்

## ரணிலின் திட்டத்தை பெரமுன ஆதரிக்காது

கொழும்பு, ஓக. 22

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு »11

## விபத்தில் காயமடைந்த ஆசிரியை உயிரிழப்பு



கிளிநொச்சி, ஓக. 22

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இரவு வீதி விபத்தில் சிக்கிய »11



## பல்லாயிரம் அடியார்கள் சூழ கொடியேறியது நல்லூரானுக்கு!

யாழ்ப்பாணம், ஓக. 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை மு.ப. 10 »10

## தண்ணிமுறிப்புக்குளத்தில் தொடர்கின்றது அட்டூழியம்!!!

### தமிழ் மீனவர்களின் 4 படகுகள் தீக்கிரை

முல்லைத்தீவு, ஓக. 22

தண்ணிமுறிப்பில் தமிழ் மீனவர்களின் 4 படகுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் முழுமையாக »10

## இந்தியாவில் வரி விதிப்பு இலங்கையில் விலை உயர்வு


கொழும்பு, ஓக. 22

பெரிய வெங்காயத்துக்கு இந்தியா விதித்துள்ள வரி காரணமாக இலங்கையிலும் பெரிய வெங்காயத்தின் விலைகள் அதிகரித்துள்ளதாக »10

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ. 120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரன் ஏற்படுத்திய ஒற்றுமை இன்றில்லை!

## சார்ள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஓக. 22

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழர்களிடத்தில் ஏற்படுத்திய ஒற்றுமை இன்றில்லை. இன்று தமிழர்கள் தமக்குள் பிளவுபட்டு தனித்தனியாக நிற்கின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 'மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு' எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டுக்கு முன்பு நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக, எமது கலாசாரத்தின் அடிப்படையில், மத அடிப்படையில், இன அடிப்படையில், மொழி அடிப்படையில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை வழிநடத்துகின்ற, எம்மை துச்சமாகக் நினைக்கின்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். வடக்கு - கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் எம்மை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு வழிநடத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வடக்கு - கிழக்கு, மலையகம் என்ற பகுதிகளை ஒன்றிணைத்தார்.

அத்தோடு மலையகத்தில் பொங்குதமிழ் நிகழ்வொன்று அப்போது மேற்கொள்ளப்பட்டது. வடக்கு - கிழக்கு மற்றும், மலையகத்தில் பொங்கு தமிழ் மேற்கொள்வதனூடாக நாம் மூன்று பகுதிளிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அன்று பிரபாகரன் அடையாளப்படுத்தினார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல், தனித்தனியாக மக்கள் பிரிந்துள்ளனர்.

இது எமது முன்னோர்களுக்கு நாம் செய்கின்ற துரோகமாகவே பார்க்கிறேன். முடிந்தவரையில் நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பயணிப்போம் - என்றார். (ம-246)

# உண்மையை மறைக்க புதிதுபுதிதாகச் சதிகள்

## அநுரகுமார சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 22

13ஆம் திருத்தம் தொடர்பான கருத்தாடல்கள் எவ்வாறு உருவாகின? மஹா விகாரையில் தேரவாதம் தொடர்பில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க ஜனாதிபதி திடீரென ஏன் சிந்திக்க வேண்டும்? குருந்தூர்மலையை பாதுகாப்பது யார்? சமூகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பிளவுகளை ஏற்படுத்த சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றனர் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

காலியில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்தனர். சிங்களம், தமிழ் என பிரித்தனர்.

அனைத்து தேர்தலின் போதும் அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த சில நாள்களாக நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவை அனைத்தும் இயற்கையாக இடம்பெறும் சம்பவங்கள் என்று நினைக்க வேண்டாம்.

திடீர் என மகா விகாரையில் தேரவாதம் தொடர்பில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க ஜனாதிபதி சிந்தித்தார். அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பிலான கருத்தாடல்கள் எவ்வாறு உருவாகின? இலங்கையில் உள்ள ஆட்சியாளர்கள் உண்மைகளை மறைத்து புதிதாகப் பிளவுகளை உருவாக்கினர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அவர்களால் உருவாக்கப்பட்டது. இரு தரப்பினர்களின் கணக்கிலக்கங்களுக்கு ஒரே தடவையில் பணம் செலுத்தப்பட்டமை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் வெளியானது.

தற்போதைய ஆட்சியாளர்களால் நாட்டில் போர் இல்லாமல், பிளவுகள் இல்லாமல் ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது. அன்று எதிரிகள் எனக் கூறியவர்கள் இன்று நண்பர்களாக மாறியுள்ளனர் - என்றார். (எ-இ)



# ஜனாதிபதி வேட்பாளராக நாமல்?

கொழும்பு, ஓக. 22

'நாமல் ராஜபக்ச சிறந்த இளம் தலைவர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை' என்று பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, 'நாமல் ராஜபக்ச ஒரு இளம் சிங்கம் எனவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தகுதியானவர் எனவும் கருத்து வெளியிட்டனர்.

ஆதலால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இளம் சிங்கத்தை களமிறக்குவதற்கு தீர்மானித்து விட்டீர்களா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சாகர இவ்வாறு தெரிவித்தார். (ம-44)

# இறைச்சியில் விஷம்; அவதானம் தேவை!

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 22

வனவிலங்குகளுக்கு விஷம் கலந்த உணவு கொடுத்து வேட்டையாடப்படும் சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளதால், வேட்டையாடப்பட்டவை என்று கூறி விற்பனை செய்யப்படும் இறைச்சிவகைகளை உட்கொள்ள வேண்டாம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக வனப் பகுதிகளில் இருந்து உணவு மற்றும் நீர் நிலைகளைத் தேடி வனவிலங்குகள் வருவதால் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சிலர் விஷம் கலந்த உணவுகளைக் கொடுத்து விலங்குகளை வேட்டையாடுகின்றனர். பின்னர் அவை வேட்டையாடப்பட்ட இறைச்சி எனத் தெரிவித்து சுற்றுலாப் பயணிகளுக்கும், அயற்பிரதேச மக்களுக்கும் விற்கப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# மலையக மக்களை பலப்படுத்த வேண்டும்

## ரவிகரன் அழைப்பு

முல்லைத்தீவு, ஓக. 22

மலையகத் தமிழர்களின் வாழ்வும், வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப்போன்று வலி நிறைந்த வாழ்க்கை என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகத் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு தலைமன்னாரில் தரையிறக்கப்பட்ட வலி நிறைந்த வாழ்வுக்கு இன்று 200 வயது. இன்றும்கூட மலையக மக்களின் வாழ்க்கை விடிந்தபாடில்லை. அவர்கள் தரக்குறைவாக அழைக்கப்படுகின்ற - தரம் தாழ்த்தி நடத்தப்படுகின்ற பல மோசமான சம்பவங்களை நாங்கள் பார்க்கின்றோம். அவை மீண்டும் கண்டிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

1964ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தில் எமது மலையகமக்கள் நாடுகடத்தப்பட்டனர். அவ்வாறு நாடுகடத்தப்பட்ட எமது மலையக உறவுகள் தற்போது இங்கு இருந்திருந்தால்தமிழ்ச்சமூகம்மிகப்பெரியதொரு அந்தஸ்தை அடைந்திருக்கும்.

வடக்கு - கிழக்கில் எம்மோடும், எம் வலிகளோடும் பங்கெடுத்து வாழும் மலையக மக்களின் வாழ்வு நல்விடியலைப் பெற நாம் அனைவரும் அவர்களுடன் துணைநிற்க வேண்டும் - என்றார். (ம-246)

# வடக்கு எல்லைக் கிராமங்களுக்கு மலையக மக்களே இன்று அரண்!

## செல்வம் எம்.பி. பாராட்டு



முல்லைத்தீவு, ஓக. 22

வடமாகாணத்தின் தமிழர் தாயகத்தின் எல்லைக் கிராமங்கள் இன்று மலையக மக்களால் பாதுகாக்கப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகம் என்பதை நாம் பிரித்துப் பார்க்க முடியாது. காரணம் என்னவென்றால் எங்களுடைய இனத்தின் போராட்டத்திலே பல இயக்கங்கள் உருவாகினாலும் அந்த விடுதலை வேட்கையோடு எங்களுடைய மலையக இளைஞர்கள் அதிலே இணைந்து கொண்டார்கள். தங்களுடைய இருப்பிடம் வேறாக இருந்தாலும் உணர்வென்ற அடிப்படையிலே எமது இனம் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திலே இணைந்துகொண்டதை நாம் இங்கே நினைவுகூர வேண்டும். அது மட்டுமல்ல வன்னியிலே சிங்கள மயப்படுத்தப்பட்டுவரும் எல்லைக் கிராமங்களை தமிழர்கள் தக்கவைத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்றால் அதற்கும் மலையக மக்களின் அர்ப்பணிப்பு பிரதானமான காரணம்.

வாழ்வதற்காக வந்த மலையக மக்கள் இன்று எம் கிராமங்களுக்கு அரணாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் இடங்கள் தான் வேறு; உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பத்திலே மலையக மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள். மலையக மக்கள் ஒரு தேசிய இனம்.

ஆதலால் அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை தட்டிக்கேட்கின்ற பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கின்றது - என்றார். (ம-19-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




'மாடு சொன்னாக் கேக்காயினம் மணி கட்டின மாடு சொன்னாத்தான் கேப்பினம்' எண்டு பழைய ஆக்கள் அடிக்கடி சொல்லுறவை. அது உண்மைதான் எண்டதை கிட்டடியில நேரில அறியமுடிஞ்சுது.

இலங்கையில நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குக்கூட இல்லாத அதிகாரமெல்லாம் இருக்கிற ஆக்கள் ஆரெண்டு நினைக்கிறியள்? வேற ஆர், எங்கட யாழ்ப்பாணத்துப் பெரியாஸ்பத்திரி செக்கியூரிட்டிமார் தான். அவை நினைச்சா எப்பவும் உள்ளுக்க போக விடுவினம், அதைமாதிரி அவை நினைச்சா விசிற்றர்ஸ் ரைமிலகூட வெளியில நிக்க வைப்பினம். ஆரும் நியாயம் கேட்டால், அடிக்கிற மாதிரி முறைச்சுக் கொண்டு வருவினம். அவை அடிக்கவே தேவையில்லை, சும்மாமுறைச்சாலே பாக்கிறவைக்கு பேதி போகும். அந்தளவுக்கு ஆக்களும் பயங்கரமா இருப்பினம். தலைமயிர், தாடியெல்லாம் நீளமா வளர்த்து, பாகுபலி படத்தில வாற காளகேயர் மாதிரித்தான் ஆஸ்பத்திரிக்குள்ள சுத்திக்கொண்டிருப்பினம். சிலவேளை யமன்தான் திரியிறானோ எண்டு இவையின்ர தோற்றத்தைப் புதிசா பாக்கிறவை பயப்பிடவும் கூடும்.


இப்பிடியெல்லாம் பெருமைமிகு செக்கியூரிட்டிமார் சிலருக்கு வெளியால இருந்து வந்த சிலர் அடிச்சதெண்டு ஒரு வழக்கு. அந்த வழக்கில அடிச்சவை குற்றத்தை ஒப்புக்கொண்டதால, நீதிபதி செக்கியூரிட்டிமார் நிக்கிற பக்கம் திரும்பி ' ஏதும் நஷ்ட ஈடு எதிர்பாக்கிறியளோ?' எண்டு கேட்டார். அவை வேண்டாமெண்டிட்டினம். அதுக்குப் பிறகு நீதிபதி செய்தவேலைதான் வேற லெவல்.

செக்கியூரிட்டிமார் சார்பில வாதாட வந்த லோயரின்ர பக்கம் திரும்பின நீதிபதி. ''இவை வேண்டாமெண்டாலும் அவையிட்ட (எதிராளியிட்ட) ஆயிரம் ரூபா தரச் சொல்லுறன். முதல்ல உந்த செக்கியூரிட்டிமாரை நல்ல சலூன்ல கொண்டுபோய், தலைமயிர் தாடியெல்லாம் ஒழுங்கா வெட்டிப் போட்டு மனிசர் மாதிரி வரச் சொல்லுங்கோ''எண்டு நக்கலோட சொல்ல, செக்கியூரிட்டிமாரின்ர தலை தொங்கிப் போச்சுது.

பிறகும் நீதிபதி சம்பவம் செய்யிறதைக் கைவிடேலை.

''இதொண்டும் சும்மா சொல்லேலை, பின்னேரம் கோர்ட்ஸ் முடிஞ்சு போகேக்க அதால வருவன். ஆரும் சீரா தலைவெட்டி, ஒழுங்கா நிக்காட்டி அவ்வளவுதான். சனங்கள் வந்து போற இடங்களில அதுக்கேத்த கண்ணியத்தோட இருக்கிறதையும், நடக்கிறதையும் கடைப்பிடிக்கிறது கட்டாயம்'' எண்டு நீதிபதி சொல்லச் சொல்ல பார்த்துக் கொண்டிருந்த சனத்துக்கு எழும்பிக் கை தட்ட வேணும் போல ஒரு பரவசம். ஆனால் நீதிமன்றத்தில அப்பிடிச் செய்யமுடியாதே. இவ்வளவுநாளும் எத்தினையோபேர் சொல்லியும், காளகேயர் கோலத்தைக் கைவிடாத பெரியாஸ்பத்திரி செக்கியூரிட்டிமாரெல்லாம், அண்டைக்கு பின்னேரத்தில இருந்து ஒழுங்காத் தலைமயிரெல்லாம் வெட்டி, பவுடர் போட்டு பாலர்வகுப்புப் பிள்ளையள் மாதிரி நிக்கினம்.

இப்பிடிச் சமூக அக்கறைகொண்ட, துணிஞ்சு தட்டிக்கேக்கிற சிலநீதிபதியள் இருக்கிறதாலதான் மாத்தவே முடியாதெண்டு நினைக்கிற சில கெட்டதுகளை இல்லாமல் செய்ய முடியுது.



- பட்சி

# கைது

யாழ்ப்பாணம், ஓக.22
கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவரைச் சோதனையிட்டனர். இதன்போதே அவரிடம் இருந்து 420 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர் மல்லாகத்தைச் சேர்ந்த 24 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 22
கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய, இருபாலைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
அவரிடம் இருந்து 6 கிராம் 600 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபர் 34 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(ம-125)






## நல்லூரான் சிறப்பம்சம்

### இரத்தின வடிவேலவனே

இரத்தின வடிவேலவனே
இன்னருளே நல்லூரானே
கரத்திலுறை வேல் ஒளியில்
காரிருள் மலைமகனே
சிரத்தினுள் அடிபோற்றி
சிரமுயர் வாழ்வுபெற
அகிலத்தோரை அரவணைத்திடு
அற்புதக் கந்தனே!

த.நாராயணன்



## கெஹலியவுக்கு எதிராக கையெழுத்துச் சேகரிப்பு!

கொழும்பு, ஓக. 22
சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு வலுச்சேர்க்கும் கையெழுத்துச் சேகரிப்பும், விழிப்புணர்வுச் செயற்பாடும் புதுக்குடியிருப்பில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தலைமையில் கையெழுத்துச் சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டதுடன் மக்களுக்குத் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (எ-19)

## வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் மோட்டார் சைக்கிளுக்கும் தீ!

யாழ்ப்பாணம், ஓக. 22
சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குழாயில் உள்ள வீடொன்று நேற்று திங்கட்கிழமை அதிகாலை அடித்துநொருக்கப்பட்டதுடன், வீட்டின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.
முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்தவாறு வந்த இருவர் வீட்டின் யன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி என்பவற்றையும் சேதமாக்கியுள்ளனர்.
அங்கிருந்த இரு மோட்டார் சைக்கிள்களுக்கும் அவர்கள் தீ வைத்துள்ளனர்.
வீட்டில் தனித்து இருந்த 20 வயதான இளைஞர் மீதும் அந்தக் குழு தாக்குதலை நடத்தியுள்ளது.
இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
(எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச்சூழலைச் சுத்தமாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## வடக்கு ஆளுநரின் வழிகாட்டலில் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஓக. 22**

**வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்குட்பட்ட இடங்களைச் சுத்தமாக்கும் விசேட வேலைத் திட்டம் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.**



உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களைச் சுத்தமாக வைத்திக்க வேண்டும் என்ற நோக்குடன் வடக்கு ஆளுநரின் வழிகாட்டலில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபைகளில் நேற்று இந்தவேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தியில் கழிவுத் தொட்டிகள் வைக்கும் நிகழ்வு வடக்கு ஆளுநர் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசங்களில் ஆயிரம் மரங்களை நடும் திட்டத்தின் முதலாவது மரம் செம்மணிச் சந்தியில் வடக்கு ஆளுநரால் நடப்பட்டது.

அந்தந்தப் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கழிவுத் தொட்டிகளுக்கு கடை வியாபாரிகளே பொறுப்பாகச் செயற்படவுள்ளனர். (எ-27)





# றைனோஸ் கிரிக்கெட் தொடரில் வராகி சுப்பர் கிங்ஸ் ஆதிக்கம்!

உதயனின் ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும், றைனோஸ் கிரிக்கெட் தொடரில் வராகி சுப்பர் கிங்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இந்த வாரத்துக்குரிய ஆட்டங்களின் நிறைவில் வராகி சுப்பர் கிங்ஸ் அணியினர் 6 ஆட்டங்களில் 4 ஆட்டங்களில் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். ஆனைக்கோட்டை ராவன் ரைடர்ஸ் அணியினர் 6 ஆட்டங்களில் 4 ஆட்டங்களில் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் (ஓட்டச் சராசரி அடிப்படையில்) இரண்டாம் இடத்தில் உள்ளனர். ஸ்டார் போய்ஸ் அணியினர் 6 ஆட்டங்களில் 4 ஆட்டங்களில் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் (ஓட்டச் சராசரி அடிப்படையில்) மூன்றாம் இடத்தில் உள்ளனர். பொண்டி போய்ஸ் அணியினர் 6 ஆட்டங்களில் 3 ஆட்டங்களில் வெற்றிபெற்று நான்காம் இடத்தில் உள்ளனர்.

லீக் முறையிலான இறுதிச்சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற்று முடியவுள்ளன. ஞாயிற்றுக்கிழமை 'பிளேஓப்' முறையிலான ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (ம-125)

# வெளிவந்தது கலைமுகம் பளவ இதழ்



யாழ்ப்பாணம், ஓக.22

கலைமுகம் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் பவள இதழ் வெளிவந்துள்ளது. சிறுகதை, கவிதை, பத்தி, கட்டுரை போன்ற பல்வேறு பயனுள்ள அம்சங்களைத் தாங்கி வழமையை விட அதிகளவான பக்கங்களுடன் கலைமுகம் பவள இதழ் வெளியாகியுள்ளது. (எ-இ)

# மஹோற்சவம்

நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-ரி2-159)



## பூநகரி - பொன்னாவெளியில்

# சுண்ணக்கல் அகழ்வு: தொடர்கின்றது போர்!

வன்னேரிக்குளம், ஓக. 22

கிளிநொச்சி பூநகரி - பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக 19ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது: பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் சுண்ணக்கல் அகழ்வால் பொன்னாவெளியின் தண்ணீர் வளம் உவர் நீராக மாறும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு தண்ணீர் உவர் நீராக மாறினால் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல்நிலம் உவர் நிலமாக மாறும். இதனால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதுடன், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் இல்லாது போகும். விவசாயத்துக்கும் கால்நடைத்துறைக்கும் ஏற்படவுள்ள இந்தப் பேராபத்தைத் தவிர்ப்பதற்காகவே சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். இந்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றனர். (ம-ரி3-13)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். தாயின் அன்பு ஆறுதலாக இருக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத்தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காவிக்குள் ஒளிந்திருக்கும் ஆபத்தான அரசியல்

'குருந்தூர்மலையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பொங்கல் வழிபாடுதான் இறுதிப்பொங்கல். இனி இவ்வாறான நிகழ்வுகளுக்காக விட்டுக்கொடுக்கப்போவதில்லை. ஏனெனில் தொல்லியல் பகுதியான குருந்தூர்மலை முழுக்கமுழுக்க பௌத்த சிங்களவர்களுக்கு உரியதே' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் அந்தப் பகுதியில் அடாத்தாக அமைக்கப்பட்டிருக்கும் குருந்தி விகாரையின் விகாராதிபதியான சாந்தபோதி தேரர். இதேதேரர் ஆதிசிவனுக்குப் பொங்கலிடுவதற்கு முதல் நாள் யாழ்ப்பாணம் – நாகவிகாரையில் பௌத்த – இந்து அமைப்புகளைச் சேர்ந்தோரைச் சந்தித்து, குருந்தூர்மலையில் சிவாலயம் அமைப்பதற்குத் தான் கொண்டிருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தினார் என்று சிவசேனையின் தலைவர் சச்சிதானந்தம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்த பேரினவாதச் சித்தாந்தம் காட்டாற்று வெள்ளமாகப் பீறிட்டுப் பெருக்கெடுக்கும் ஒருவர், சிவாலயமொன்றை அமைப்பதற்கு அதுவும் குருந்தூர்மலையில் அமைப்பதற்கு எத்தனிக்கின்றார் என்றால் அதற்குப் பின்னாலுள்ள திரைமறை நகர்வுகளும் நடவடிக்கைகளும் பேராபத்தானவையாகவே இருக்கும். இதை எந்தச் சிரமமும் இல்லாமல் தமிழர்கள் ஊகித்துக் கொண்டனர். 70 ஆண்டுகாலங்களாக இனத்துவேசம் மலிந்த பூமியாக மாறியுள்ள இந்தத் தேசத்தில், தேரருடைய அறிவிப்பின் பின்னாலுள்ள சூட்சுமத்தை நாடிபிடித்துப் பார்ப்பதொன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆனால், தமிழர்களுக்கே தண்ணிகாட்ட எத்தனித்தது சிவசேனை என்கிற பெயருக்குள் ஒளிந்துள்ள பௌத்த 'பினாமி' அமைப்பு. 'குருந்தூர்மலை – குருந்தி விகாரையின் விகாராதிபதியே அங்கு சிவாலயம் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளார். இது இன நல்லிணக்கத்துக்கான மிகச்சிறந்த நடவடிக்கை. ஆக, இத்துடன் இந்தப் பிரச்சினைகள் முடிந்தன' என்பதாகப் பாசாங்கு செய்தது அந்த அமைப்பு.

ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகக்குழுவென்ற ஒன்றிருக்கையில், குருந்தூர்மலையில் காலம்காலமாக வழிபாடுகளை மேற்கொள்ளும் பூர்வகுடிகள் இருக்கின்ற நிலையில், இவர்கள் எவரையும் பேச்சுக்கு அழைக்காமல் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கலந்துரையாடல் எந்தளவுக்குத் தகும். பிரச்சினைக்குரிய – பாதிக்கப்பட்ட தரப்பை அழைக்காத அந்தப் பேச்சுகள் எவ்வாறு 'பேச்சுகளாக' அமையும். இந்தப் பேச்சுகளில் பங்கெடுத்து குருந்தூர்மலை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு சிவசேனை முதலில் யார்? இங்குதான் சிவசேனை பேரின அரசாங்கம் சொன்னபடி ஆடுகின்ற பொம்மை என்பது அம்பலமாகின்றது.


சிவசேனை என்னும் சிறு குழுவோ அல்லது அதன் தலைவர் சச்சிதானந்தமோ இந்து மதத்துக்கு நன்மை பயக்கக்கூடிய செயற்றிட்டங்களாக இதுவரை எதைத்தான் செய்தன? தமிழர் தாயகத்தில் சில ஆலயங்கள் அறக்கட்டளைகளைக் கொண்டு பல காத்திரமான உதவிகளை போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பொருண்மியத்தில் நலிந்தோருக்காகவும் செய்து வருகின்றன. சச்சிதானந்தத்துக்கு இருக்கும் இந்தியத் தொடர்பும் வலைப்பின்னலும் மிகப்பெரிது. உண்மையில் அவரால் இவ்வாறான உதவிகளை ஒழுங்கமைக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. மாறாக 'கிறிஸ்தவர்ளுக்கும் இந்துக்களுக்கும் எதிராக சிண்டுமுடியும் வேலையைத்தான் ' சச்சிதானந்தம் இன்று தன் முழுநேர செயற்பாடாகக் கொண்டிருக்கின்றார். அதைத்தாண்டிய அவருடைய இந்து சமயப்பங்களிப்பு என்பது பூச்சியமே.

''தமிழர்கள் தமக்குள் சாதி, சமயம் என்பவற்றின் பெயரால் பிளவடைய வேண்டும். அவர்களுக்குள் பிரிவினை இருந்தால்தான் அவர்கள் இனவிடுதலை தொடர்பில் சிந்திக்க மாட்டார்கள். அடுத்தகட்டத்தை நோக்கிப் பயணப்பட மாட்டார்கள். ஆதலால், தமிழர்களுக்குள் நீறுபூத்த தணலாக இருக்கும் சாதி, சமயப் பிரிவினைகளை கொழுந்துவிட்டெரிய வைத்தால் அந்தத் தீ பேரினவாதத்தை குளிர்காயவைக்கும்" என்பதே சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் திட்டம். இதற்காக சாதியப் பிளவுகளை ஏற்படுத்த அரச கைக்கூலிக்குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவுக்குச் சமாந்தரமாக – அதற்குச் சற்றும் சளைக்காதவகையில் சமயப்பிளவுகளை உண்டாக்க உருவாக்கப்பட்டதுதான் இந்தச் சிவசேனை. பௌத்த பேரினவாதிகள் எங்கள் நிலத்தைப் பிடுங்கி, எம்மை விரட்டியடித்து ஆயிரம் விகாரைகள் கட்டினாலும் பம்மிக் கொள்ளும் 'சச்சி' குழுவினர், தமிழ்க் கிறிஸ்தவர்கள் தும்மினாலும் கூட 'பறங்கிகள் சைவத்தை அழிக்கிறார்கள்' என்று பாய்வதன் பின்னணி இதுதான். எவ்வாறு இந்தியாவில் செயற்படும் சிவசேனை ஒரு தீவிரவாத இந்துத்துவ அமைப்பாக இருந்து, சிறுபான்மை மதங்கள் மீது வன்முறை புரிந்து, சொந்த மக்களையே அழித்து, இன்று இந்தியாவில் பலரின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றதோ, அவ்வாறுதான் இலங்கையில் இந்தச் சிவசேனையும் தேசக் கனவைச் சுமந்துகொண்டிருக்கும் பல்லாயிரம் மக்களின் எதிர்ப்பை – பகைமையைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது என்பதே யதார்த்தம்.

நாளொரு நல்வார்த்தை

"மனித நடத்தை மூன்று முக்கியான மூலங்களிலிருந்து ஊற்றெடுக்கின்றது. ஆசை, உணர்ச்சி மற்றும் அறிவு என்பனவே அவை"

- பிளேட்டோ -




# எதிர்க்கட்சிகளை இணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணி

## டிலான் பெரேரா தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 22**

**நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துப் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் உருவாக்குவோம். எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளைத் தோற்கடிப்பது அத்தியாவசியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ராஜபக்சக்களின் பாதுகாவலனாகச் செயற்படவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். நெருக்கடியான சூழலில் எவரும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவில்லைஎன்றுகுறிப்பிடுவது தவறு. அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயார் என சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகபெரும அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்திருந்தார்.

டலஸ் அழகபெருமவை பிரதமராக்க வேண்டாம் என பஸில் ராஜபக்ச தெரிவித்தார். ராஜபக்சக்களுக்கு எதிரானவர்களை பிரதமராக்கினால் ராஜபக்சக்களின் எதிர்கால அரசியல் பாதிக்கப்படும் என்பதை நன்கறிந்த அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள்.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றதன் பின்னர் எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்தும் செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கொண்டு வெற்றிகொண்டுள்ளார். அரசாங்கம் தன் விருப்பத்துக்கு அமையச் செயற்படுகிறது. தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை சகல எதிர்க்கட்சிகளும் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)

## ஆவணங்களின் ஆயுள் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 22

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் 6 மாதங்களுக்குப் பின்னரும் செல்லுபடியாகும் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவை 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்ற விதிமுறைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன என்று அந்தத் திணைக்களம் தெரிவித்தது. ஆவணங்களில் ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே புதிய நகலைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## மருத்துவநிபுணர் இல்லை: இருதய சிகிச்சை பாதிப்பு

கொழும்பு, ஓக.22

கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் சிறுவர் இருதய சிகிச்சைப் பிரிவின் பல சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மருத்துவமனையின் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

கராப்பிட்டிய மருத்துவமனையின் இருதய பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் தொழிலுக்காக வெளிநாடு சென்றமையால் இந்த இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

சிறுவர்களுக்கான இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவமனை நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

நாளை

23.08.2023

புதன்கிழமை

ஆவணி 06

சுபநேரம் : 04.35 - 06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார் ரணில்

கொழும்பு, ஓக. 22
சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, அந்த நாட்டு ஜனாதிபதி ஹலிமா யக்கோப்பைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திங்கட்கிழமை சிங்கப்பூர் பயணமானார். அங்கு அவர் பல சந்திப்புக் களை மேற்கொள்ளவுள்ளார்.
சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங் மற்றும் ஏனைய உயர்மட்ட பிரமுகர்களையும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க சந்திக்கவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்தின்போது பெரிஸ் உடன் படிக்கையின் கீழ் காபன் சீராக்கல் தொடர்பான ஒப் பந்தமும் கைசாத்திடப்படவுள்ளது. (ஏ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1943



மறைவு 21 . 08 . 2023

### பூபாலதுரை சறோஜினிதேவி

காரைநகர் மொந்திபுலத்தைச் சேர்ந்த பூபாலதுரை சறோஜினிதேவி நேற்று (21.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற பூபாலதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் முருகேசு செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், விஷ்ணுகாந்தனின் பாசமிகு தாயாரும், கோசியதேவியின் அன்பு மாமியாரும், கபிஷ்கா வின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், பற்குணம், செல்லையா மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2023) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மொந்திபுலம், காரைநகர், 0777 132 125.
தகவல்: மகன்- விஷ்ணுகாந்தன்
(CS 28037) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 06 . 1938



மறைவு 19 . 08 . 2023

### திருமதி பொன்னம்பலம் ஐயா பரிபூரணம்

மந்திகையை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பொன்னம்பலம் ஐயா பரிபூரணம் (சிவமணி) (19.08.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் ஐயா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா-யோகம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமிகுருக்கள்- கமலாம்பாள் அவர் களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (நில அளவையாளர்), சிவலோகநாயகி, அன்னபூரணம், மகாதேவன் (மருந்தாளர்), சிவானந்தவல்லி (மருந்தாளர்), ஆகியோரின் அன்பு சகோதரியும் ரவீந்திரன் (ஓய்வு பெற்ற நூலகர் சாவகச்சேரி பிரதேச சபை) அவர்களின் பாசமிகு தாயும், வள்ளிநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்-யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி, சாவகச்சேரி. 077 823 3586
தகவல்: குடும்பத்தினர்.

# பிரச்சினைகளை மறைக்கவே 13 ஐ கையிலெடுத்தார் ரணில்!

### சாடுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க

**கொழும்பு, ஓக.22**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்றோம் என்று கூறி முன்னெ டுக்கப்படும் விடயங்கள் இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்று வித்து விடும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, பொரளையில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-
மக்களுக்குப் பல பிரச்சினை கள் உள்ளபோது ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஏன் அடிக்கடி பேசுகின்றார்? இந்தச் சந்தர்ப்பத்தில் 13 தொடர்பில் ஏன் பேச வேண் டும்?. இவற்றைப் பார்க்கும்போது இரண்டு விடயங்கள் தெரிகின்றன. ஒன்று 13ஐ நடைமுறைப்படுத்தப் போகின்றேன் என்று கூறி நாட்டில் நிலவும் உண்மையான பிரச்சினை களை மறைப்பது. இரண்டாவது அடுத்த வருடம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வது.
ஜனாதிபதி13ஐநடைமுறைப்படுத்தப் போவதுமில்லை. நான் அதைச் செய்வேன் என இந்தியாவையும், தமிழ் அரசியல்வாதிகளையும், வடக்கு - கிழக்கு மக்களையும் ஏமாற் றிக் கொண்டிருக்கிறார். 13 என்பது அரசமைப்பின் ஒரு பகுதியாகும். முதலில் உள்ளூராட்சிமன்றத் தேர் தலை நடத்துங்கள்.
தேர்தலை நடத்தினால் 13ஆவது திருத்தத்தில் உள்ள 98 வீதமான விடயங்களை பூர்த்தி செய்ததைப் போன்றதாகும் - என்றார். (ஏ-இ)

## பாதாளக்குழு சூத்திரதாரிகள் இந்தியாவில் கைது!

கொழும்பு, ஓக. 22
பாதாள உலகக் குழுவின் பிரபல தலைவனாகக் கரு தப்படும் கணேமுல்ல சஞ்சீவ மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் கரு தப்படும் கோத்தா அசங்க ஆகியோர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை புல னாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.
பாதாள உலக ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுக்கள் இருவ ரையும் கைது செய்ய முயன்றபோது, அவர்கள் 2018ஆம் ஆண்டு மன்னாரிலி ருந்து இந்தியாவுக்குப் படகு மூலம் தப்பிச் சென்றனர்.
இந்த நிலையிலேயே நீண்ட கண்காணிப் புக்குப் பின்னர் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஏ-இ)


## பணியாளர் தேவை

**திருநெல்வேலியில் இயங்கிவரும் உணவகம்** மற்றும் **பலசரக்கு கடைக்கு** பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவை.
முகாமையாளர், காசாளர், விற்பனையாளர், றொட்டி வேலை செய்பவர், சமையல் உதவி, உணவு பரிமாறுபவர், தேநீர் தயாரிப்பாளர்.
உணவு, தங்குமிடம் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
077 844 7773 / 075 844 7773


## INVITATION FOR BIDS
### TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of ward 24, Medical ward front & Back, Dialysis unit corridors & Ramp, Dialysis unit Toilet Renovation, Modification as Bone Marrow Transfusion unit in Rehabilitation center & JICA lab work Top tiling. | 2000.00 | 84,000.00 | 91 | 4.2 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 23.08.2023 up to 06.09.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 07.09.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
21.08.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெற்றிபெற்றது சுப்பர் கிங்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 22

உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சிக் கிண்ணத் தொடரில் சாவா சுப்பர் கிங்ஸ் அணிக்கும் சங்கத்தானை ஸ்மார்சஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுப்பர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவா சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் களத்தடுப்பைத் தேர்வு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்மார்சஸ் அணியினர் 8.1 ஓவரில் 31 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

சாவா சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக சாந்தீபன் 4 இலக்குகளையும், கஜவதனன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா சுப்பர் கிங்ஸ் அணியினர் ஆ.தர்சன் 15 ஓட்டங்களையும், பு.தர்சன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 4.2 ஓவரில் 36 ஓட்டங்களைப் பெற்று வென்றது. (ம)

## கச்சாய் ஈகிள்ஸ் அபார வெற்றி!

உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில் கச்சாய் ஈகிள்ஸ் அணிக்கும் கைதடி கிரிக்கெட் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி கிரிக்கெட் அணி 10 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கஜன் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் தினுசன் 4, தாரகன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். 59 என்ற வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய கச்சாய் அணி 7.2 ஓவரில் 5 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. தர்சன் 15 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

## நூல் அறிமுக கருத்தரங்கம்

பிரபல கர்நாடக சங்கீத வித்துவானும், எழுத்தாளருமான ரி.எம். கிருஷ்ணா எழுதிய மறைக்கப்பட்ட வரலாறு என்ற நூல் அறிமுகக் கருத்தரங்கம் நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ரி.எம். கிருஷ்ணா கலந்துகொண்டு, சில பாடல்களையும் பாடுவதுடன் தனது நூல் பற்றிய கேள்விகளுக்கும் பதிலளிப்பார். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ய)



# 'மீம்ஸ்' உலகின் மன்னன் சீம்ஸ் மறைவு!

இணையத்தளங்களில், மீம்ஸ் உலகில் பலராலும் விரும்பப்பட்ட சீம்ஸ் என்ற நாய் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தது.

சீம்ஸ் நாயின் இறப்பை அதன் உரிமையாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். 'வரலாற்றில் தனது பெயரை சீம்ஸ் வலுவாகப் பதிவுசெய்துள்ளது' என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாக சுகவீனமின்றி சிகிச்சை பெற்றுவந்த சீம்ஸ், சிகிச்சையின்போதே உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் எத்தகைய நோயால் அது பாதிக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படவில்லை. புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ம)

# 'சொர்க்கத்தின் சுமை'மலையகக் கதைக் காட்சி

யாழ்ப்பாணம், ஓக.22

தென்னிந்தியாவிலிருந்து மலையகத்துக்கு தோட்டத்தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையும், கலை வட்டமும் இணைந்து 'சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்தக் காட்சி திறந்துவைக்கப்படவுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி இந்தக் காட்சியை பார்வையிட முடியும்.

காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பிரபல கர்நாடக இசைப்பாடகர் ரி.எம்.கிருஷ்ணா, பிரபல தமிழக எழுத்தாளர் பெருமாள் முருகன், வரலாற்றாசிரியரும் ஆய்வாளருமான பேராசிரியர் ஆ. இரா.வேங்கடாசலபதி, காலச்சுவடு வெளியீட்டக உரிமையாளர் கண்ணன் சுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

# நாட்டின் வீழ்ச்சிக்கு சஜித்தும் காரணமே

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டபோது, அதை மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. அப்போது எவரும் நாட்டைப் பெறுப்பேற்க வரவில்லை. 2019ஆம் ஆண்டு சஜித் பிரேமதாஸ சரியான முடிவை எடுத்திருந்தால் இந்த நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்காது.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். வட்டுக்கோட்டையில் கடந்த சனிக்கிழமை மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் ஒரு போராளி. அவர் வடக்குப் பிரச்சினையை மட்டுமல்லாது முழு இலங்கையின் பிரச்சினைகள் தொடர்பாகவும்பேசிய ஒருவர். 30 ஆண்டுகளாகப் போர் நீடித்தது. ஜே.வி.பி.யும் போரில் ஈடு பட்டது. இவற்றின் விளைவாக நாட்டின் எதிர்காலம் படுபாதாளத்துக்குச் சென்றது. பொதுமக்கள் அல்லல்பட்டனர், அரசியல்வாதிகள் குதூகலமாக இருந்தனர். நாடு வீழ்ந்தபோது எல்லாம் அதைத் தூக்கி விட்டது ஐ.தே.கட்சியே. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியபோது டலஸ் அழகப்பெரும, அனுரகுமார, சஜித் என அனைவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறித் தப்பிச்சென்றனர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே இருந்தார். அவரே நாட்டை மீட்டெடுத்தார். 2019ஆம் ஆண்டு அரசியல் மாற்றத்தின்போது சஜித் முறையான முடிவை எடுத்திருந்தால் நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சென்றிருக்காது. சஜித் அவரது தந்தை பிரேமதாஸவின் உரோமத்துக்குக் கூடப் நிகரில்லாதவர்.

1942 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டுவரை தன்னிறைவாக இருந்த நாடு அதன்பின்னர் இனவாத அரசியலால் பின்னோக்கிச் சென்றது. மீண்டும் அந்த நிலைமை தோன்றியுள்ளது.

நாம் ஒரு நாட்டு மக்களாகச் செயற்படுவோம். வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் எமது அமைப்பாளர் விஜயகலா மகேஸ்வரன் மூலம் வளர்த்தெடுக்கத் தீர்மானித்துள்ளோம். எமதுநாடு ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும். அதுவே எமது கட்சியின் நோக்கம் - என்றார். (ஏ-125)

# 'புனைவும் வரலாறும்' கருத்துரைகள் நாளை

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ். பல்கலைக்கழக நுண் கலைத்துறையின் ஏற்பாட்டில் 'புனைவும் வரலாறும்' என்ற தலைப்பில் இரு கருத்துரைகள் நாளை மறுதினம் 24ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கருத்துரைகளை சர்வதேசப் புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகன் மற்றும் சென்னை வளர்ச்சி நிறுவன த்தைச் சார்ந்தவரும் ஆய்வு நூல்களை வெளியிட்ட வரலாற்றாசிரியருமான பேராசிரியர் ஆ. இரா.வேங்கடாசலபதி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் ஏக்கர் வறட்சியால் அழிவு

கொழும்பு, ஓக. 22
நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக 50 ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிலைமை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஒ,இ)

## போதைக்கு அடிமையானவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22
மூளாயில் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான இளைஞன் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இளைஞன் போதைப்பொருளுக்கு அடிமையானதை அறிந்த வீட்டார் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் அவரை சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தினர். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவரை கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-125)

## இளைஞன் திடீர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 22
கொட்டடிப் பகுதியில் நேற்று இரவு இளைஞன் திடீரென உயிரிழந்துள்ளான்.
அதேயிடத்தைச் சேர்ந்த மிதுன்ராஜ் (வயது - 31) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-26)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 12 • 02 • 1940 — மறைவு 24 • 07 • 2023


கடந்த (24.07.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் அரியரத்தினம் தவமணி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (23.08.2023) புதன்கிழமை இல.81, புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அஞ்சலி, ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.81, புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.
(CS/ 51742)AH-1
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 • 12 • 1995 — மறைவு 18 • 08 • 2023

### குணசேகரம் வர்துஷா


(தாதியர் - Northern Hospital)

77/57, இராமநாதன் வீதி, கலட்டி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசேகரம் வர்துஷா அவர்கள் கடந்த (18.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் குணசேகரம் அருள்மாதினி தம்பதியரின் அன்பு மகளும், அனோஜிதா (கனடா), தாருண்யா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனுஷன் (கனடா) அவர்களின் மைத்துனியும், ஆதிரன்விஜய் (கனடா) இன் சித்தியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-லக்சுமி, யோகபாலன் - பரமேஸ்வரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 0777 1105 27
0761 0951 25

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 26038) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 • 09 • 1949 — மறைவு 20 • 08 • 2023

### ஆறுமுகம் தவராசா

சங்கானையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தவராசா அவர்கள் கடந்த (20.08.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்ஷிகாவின் அன்புத் தந்தையும், சாந்தபாலனின் அன்பு மாமனாரும், தக்ஷா, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், தவமலர், தவராணி, தவரஞ்சிதம், தவராகினி, மகேந்திரன், மனோகரன், காண்டீபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, சண்முகராஜா, பற்குணராஜா, மகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சாந்தபாலன் (மருமகன்)
தர்ஷிகா (மகள்)
077 0700 364 Whatsapp

தொடர்புகளுக்கு:
077 308 9449,
077 308 9338
(CS 26036) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
16 • 02 • 1948



உதிர்வு
23 • 07 • 2023

கடந்த 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர்
## திருநாவுக்கரசு கமலாம்பிகை

**திதி:சோபகிருது வருஷம் ஆடிமாதம் பூர்வபட்சம் சஷ்டி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மா...
எம் உயிரில் கலந்த உறவாக
மாசற்ற உறவாடி
மனசெல்லாம் நிறைந்திருந்து
எங்கள் மனங்களெல்லாம்
வலிநிறைந்து துவண்டு அழ
மாரடைப்பு என்று மறைந்தீர்கள்
நாள்கள் முப்பது கடந்ததுவோ!
போகவில்லை உங்கள்
முத்தான நினைவுகள் எம்மனங்களில்
வலிக்குதம்மா உம்பிரிவு
கோடி உறவுகள் அருகில் இருந்தாலும்
'அம்மா' என்ற சுகம் கிடைக்காதே
ஏங்குகின்றோம் துயரினிலே!

உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்திபெற துதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும், ஆறுதல் கூறிய உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**2ஆம் ஒழுங்கை,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

உங்களின் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாயிரம்...


மணிக்கு பல ஆயிரம் அடியவர்களின் அரோகரா கோஷங்களுக்கு மத்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கருவறையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வேற்பெருமானுக்கு நேற்றுக் காலை விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் வேற்பெருமான், வள்ளி தெய்வயானை நாயகியர், விநாயகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களுக்கும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

முத்தெய்வங்களும் கொடித் தம்பத்தடியை வந்தடைந்ததைத் தொடர்ந்து அந்தண சிவாச்சாரியார்களின் வேதபாராயணம் ஓத, தவில், நாதஸ்வர வாத்தியங்கள், அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க, காண்டாமணி ஒலிக்க நேற்று மு.ப. 10 மணிக்கு கொடியேற்றம் சிறப்பாகவும், மிகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது.

தம்பபூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முத்தெய்வங்களும் அடியவர்கள் புடைசூழ உள்வீதியில் எழுந்தருளி வீதி உலா வந்தனர். முற்பகல் 11.15 மணியளவில் உள்வீதி உலா நிறைவுற்றது.

கொடியேற்றத் திருவிழாவை முன்னிட்டு நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் மேற்கொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியமையை அவதானிக்க முடிந்தது. கொடி



யேற்றத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.66)

## தண்ணிமுறிப்புக்...



எரித்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தண்ணிமுறிப்புக் குளத்தில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட சிங்கள மீனவர்களை, தமிழ் மீனவர்கள் இந்த மாதம் 5ஆம் திகதி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். மீனவர்களைப் பிடித்த தமிழர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்தப் பதற்றம் நீடித்து வந்த நிலையிலேயே தமிழ் மீனவர்களின் படகுகள் எரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - நான்கு வருடங்களுக்கு முன்பும் தண்ணிமுறிப்புக்குளப் பகுதியில் 6 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.19)

## இந்தியாவில்...

தேசிய பாவனையாளர் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரிய வெங்காயத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள வரியால் இலங்கையிலும் பெரிய வெங்காயத்தின் விலைகள் அதிகரித்துள்ளன. இலங்கை, இந்தியாவின் மாநிலமா என்பது எங்களுக்குத் தெரியாது.

நேற்று பெரிய வெங்காயம் ஒரு கிலோ 140 ரூபாவாக இருந்தது. இன்று மஹரகம சந்தையில் 240 ரூபாவாக உள்ளது. இது வியாபாரிகளின் தவறு அல்ல. இவர்கள் மற்றுமொருவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். நேற்றைய்தினம் 140 ரூபாவாக இருந்தது. இன்று 240 ரூபா ஆனது எப்படி? இந்த அதிகரித்த தொகை யாருக்குச் செல்லும்? இந்தியாவுக்குச் செல்கிறதா? யார் இந்த இடைத்தரகர்கள்?

அப்பாவி மக்களைக் கொள்ளையடித்து சாப்பிடுகிறார்கள். கடந்த காலத்தில் இலங்கைக்குப் பெரிய வெங்காயம் கொண்டு வரப்பட்டதா? அவற்றைப் பரிசோதித்து, 140 - 120 ரூபா என்ற விலையை உயர்த்தாமல் உடனடியாக விற்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளது. (அ-ஒ.இ)

## எரிவாயு...

ஏற்பட்டிருந்த விலை அதிகரிப்புக்கு அமைவாக, கடந்த மாதமே சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவிருந்தது. எனினும், இறுதி நேரத்தில் இந்த விலையேற்றம் கைவிடப்பட்ட நிலையில், இம்மாதம் அதனை அதிகரிக்கும் எண்ணத்தில் லிட்ரோ நிறுவனம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 4ஆம் திகதியளவில், 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 204 ரூபாவால் குறைக்கப்பட்டு 2 ஆயிரத்து 982 ரூபாவாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

# கொடிகாமத்தில் 4 வாகனங்கள் விபத்து

யாழ்ப்பாணம், ஓக. 22

கவனயீனமான சாரத்தியம் காரணமாக கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட தொடர் விபத்தில் நான்கு வாகனங்கள் மோதிக் கொண்டன. இந்த தொடர்விபத்தில், அதிசொகுசுப் பேருந்து பயணிகள் அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டனர்.

ஏ-9 பிரதான வீதி, கொடிகாமம், கோயிலாமனை சந்திக்கு அண்மையாக உள்ள திருமண மண்டபம் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு 11:30 மணியளவில் ஒரேநேரத்தில் நான்கு வாகனங்கள் ஒரே இடத்தில் மோதிக் கொண்டன.

யாழ். - கொழும்பு அதிசொகுசுப் பயணிகள் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னே பயணித்துக் கொண்டிருந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் கார் பலத்த சேதங்களுக்குள்ளானது. இவ் விபத்து இடம்பெற்று கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தவேளை அதே பகுதியில் மேலும் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகின. யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து கொடிகாமம் பகுதி நோக்கி கதியால்களை ஏற்றியபடி சென்றுகொண்டிருந்த உழவியந்திரத்தின் வருகையை அவதானிக்காது எதிரே வந்த பாரவூர்தி மோதிக் கொண்டது.

விபத்துத் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவிபத்துக்குள்ளான நான்கு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிசொகுசு பேருந்து அதி வேகமாகவே யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்ததாகவும், மோசமான சாரத்தியத்தினாலேயே இவ் விபத்து இடம்பெற்றதாக பேருந்தில் பயணித்த பயணிகள் ஆவேசமாக கத்திச் சத்தம் போட்டு சாரதியுடன் முரண்பட்டனர். கொடிகாமம் பொலிஸாரின் தலையீட்டையடுத்து நிலைமை கட்டுக்குள் வந்தது. (அ-ஒ.100)


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 • 07 • 1937



மறைவு 21 • 08 • 2023

**அப்பையா அன்னரத்தினம்**

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா அன்னரத்தினம் அவர்கள் நேற்று (21.08.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும், திரு.திருமதி இளையதம்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னுத்துரை, கனகசபை, வேலாயுதபிள்ளை, மகேஸ்வரி, ஆறுமுகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற மகேந்திரன், மற்றும் தவமலர், பகீரதன் (நோர்வே), சாவித்திரி, கோடீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசசேகரம் J.P, சிவலோகநாயகி, தெய்வதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சயன், அனோஜன், அக்சயன், அபிஷன், அக்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சிவபாக்கியம், தேவாம்பிகை மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2023) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில்.
077 4644499

தகவல்: குடும்பத்தினர்.

(CS 26041) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழியை அகழ்வதற்குரிய நிதியைக் கண்டறிவதில் சிக்கல் நிலைமை நீடித்திருந்தது. இதன் காரணமாக இரண்டு தடவைகள் அகழ்வு நடவடிக்கை தொடர்பில் ஆராயும் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தொடர் முயற்சி காரணமாக நீதி அமைச்சு நிதி விடுவிக்க இணங்கியுள்ளது.

'கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளைமுன்னெடுப்பதற்கு உரிய நிதியை வழங்க அனுமதி கிடைத்துள்ளது. இன்று (நேற்று) நீதியமைச்சின் செயலருக்கு அனுமதி வழங்கப்பட்ட நிதியை மாவட்டச் செயலகத்துக்கு விடுவிக்குமாறு கோரி கடிதம் அனுப்பியுள்ளேன். நிதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விடுவிக்கப்பட்டவுடன் அகழ்வுகள் ஆரம்பமாகும். சுமார் 5 மில்லியன் ரூபாஇதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட சட்டமருத்துவ நிபுணர் கனகசபாபதி வாசுதேவா தலைமையில் பிற திணைக்களங்களும் இணைந்து அகழ்வுப்பணியை முன்னெடுக்கவுள்ளன' என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். (அ-ஒ.5,125)

## கம்மன்பிலவின்...

கொழும்பிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு முன்பாக போராட்டம் நடத்தப்போவதாகவும் முதல் கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்னால் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் உதயகம்மன்பில தெரிவித்திருந்தார். அத்துடன் தெற்கிலுள்ள சிங்கள மக்கள்தான் மூன்று தலைமுறைகளாக தமிழ் மக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம்கேட்டபோது; கம்மன்பில வரலாறு தெரியாத முட்டாள். தமிழ் மக்கள்தான் தெற்கில் தொடர்ச்சியாக இன்றுவரை வேட்டையாடப்படுகின்றார்கள். தெற்கிலுள்ள தமிழ் மக்களை இலக்குவைத்துத்தான் கலவரங்கள் கூட கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தன. போர்க்காலத்திலும் போருக்குப் பின்னரும் தெற்கிலுள்ள தமிழ் மக்கள்கடும் பாதிப்புகளை எதிர்கொண்டனர்.

நாங்கள் தெற்கில் பாதுகாப்பாக இருந்திருந்தால் எவ்வாறு எனது தந்தை கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்? எங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லை. எங்களுடைய உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தே தீரும். போர்க்காலத்தைவிட தற்காலமே மோசமானது. போர்க்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தார்கள். இதன் காரணமாக தமிழர் மீது கை வைத்தால் அடிவிழும் என்று தெரியும். இப்பொழுது எந்தவொரு கவசமும் இன்றி வாழ்ந்துகொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகப் பயணிக்கின்றோம்.

சிங்கள - பௌத்த மக்களுக்கு எதிராக வடக்கு - கிழக்கு மக்கள் செயற்படவில்லை. போர் முடிவடைந்த பின்னர் வடக்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் ஏனைய இடங்களில் சிங்கள மாணவர்கள் படிக்கின்றார்கள். வேலை வாய்ப்புக்காக அதுவும் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்பைக்கூட தட்டிப்பறித்து சிங்களவர்கள் வடக்கு - கிழக்குக்கு வருகின்றார்கள். அவர்கள் சிங்களவர்கள் என்பதால் அங்குள்ள தமிழ் மக்கள் அவர்களை ஒன்றும் செய்யவில்லையே?

போர்க்காலத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் விகாரைகளைப் பாதுகாத்தனர். தொல்பொருள் என்று சொல்லி தமிழ் - பௌத்த இடங்களை சிங்களமாக மடைமாற்றுகின்றனர்.

கம்மன்பில போன்றவர்கள் எங்களை பயங்கரவாதிகளாக முத்திரைகுத்தி அடக்கி ஒடுக்கலாம் என்று நினைக்கக்கூடும். அது கனவிலும் நடந்தேறாது என்பதை அவருக்குச் சொல்கின்றேன். உங்களின் இனவழிப்பை தொடர்ந்தும் அம்பலப்படுத்துவோம் - என்றார்.

இதேவேளை- கம்மன்பிலவின் கருத்துத் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நேற்றைய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போது; எங்களுடைய மதத்தலத்தில் பௌத்த மதச்சின்னங்களைத்திணிக்கவேண்டாம் என்றே நாம் கூறுகின்றோம். அது மாத்திரமல்ல அரசாங்கமும் இதனை இணைந்து செய்கின்றது. அவர்கள் இனவாதத்தை கையிலெடுக்காமல் விட்டிருந்தால் நாடு இவ்வளவு படுபாதாளத்துக்குள் போயிருக்காது. அதேபோல தற்பொழுது மதப்பிரச்சினையையும் தொடக்கியிருக்கின்றார்கள். இதனால் நாடு பிரச்சினைக்குள் மீள செல்லப் போகிறது. இவர்கள் கொழும்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளின் முன்னால் போராட்டம் செய்தால் செய்யட்டும். அது அவர்கள் தம்மை பௌத்த - சிங்கள தலைவர்கள் என சித்திரித்து வாக்குவங்கியைப் பெருக்க போடுகின்ற நாடகமே - என்றார். (அ-ஒ,125)

## குப்பையுடன்...

ரூபா பெறுமதியான 8 பவுண் தங்க நகைகள் நகரசபையின் குப்பை மேட்டிலிருந்து சுகாதாரத் தொழிலாளர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- சுமார் 8 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கும் நோக்கில் பழைய துணியில் கட்டி குப்பைகள்போல உரிமையாளர் வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார். இந்நிலையில் அண்மையில் டெங்கு ஒழிப்புக்காக அவரது வீட்டை சுத்தம் செய்கின்ற பொழுது நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன. இந்நிலையில் மண்டுவில் வட்டாரத்தில் வழமையான கழிவகற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகரசபை பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

வீட்டின் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதாரத் தொழிலாளர்களால் அகற்றப்பட்டு உழவியந்திரத்தில் நகரசபைக்குச் சொந்தமான குப்பைகள் தரம் பிரிக்கின்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு கொட்டப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த நகைகள் காணாமல் போனதையடுத்து வீட்டு உரிமையாளர் குப்பைகளோடு நகைகளும் வீதியில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களைச் சோதனையிட்டுள்ளார். இதன்போது குப்பைகள் ஏற்றிச் செல்லப்பட்டமை உறுதியானதையடுத்து நகரசபையின் அதிகாரிகளை அவர் தொடர்புகொண்டுள்ளார். உடனடியாகச் செயற்பட்ட நகரசபை நிர்வாக அதிகாரி மற்றும் நகரசபையின் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நகராட்சி மன்ற கழிவு சேகரிக்கும் இடத்துக்கு வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளேயிருந்து வெளியேயும் எவரையும் அனுமதிக்காத வண்ணம் செயற்பட்டு சுகாதாரத் தொழிலாளர்களைக் கொண்டு தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது பழைய துணியில் கட்டி குப்பைகளோடு குப்பையாக வீதியில் வீசிய சுமார் 8 பவுண் நகைகள் குடியிருப்பாளரின் முன்னிலையிலேயே சுகாதாரத் தொழிலாளர்களால் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்களின் நேர்மையான விரைந்த செயற்பாட்டை மக்கள் பாராட்டியுள்ளனர். (அ-ஒ.9,27)

## ரணிலின்...

பெரமுன உடன்படாது. இது விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளோம் என்று பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். அத்துடன், குருந்தூர்மலை விவகாரத்தைப் பயன்படுத்தி நாட்டில் இனவாதத்தை பரப்புவதற்கு தமிழ்க் கட்சிகள் முற்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

'நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுவருகின்றன. இந்தப்பிரச்சினையை தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது என அரசிடம் கூறியுள்ளோம். அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கே இனவாதத்தை பரப்ப வேண்டிய தேவை உள்ளது. அதனால்தான் பிரச்சினைகளை தோளில் சுமக்கின்றனர். தெற்குக்கும் தவறான செய்தியை வழங்குகின்றனர். 13 ஐ வழங்குவதற்கு எமது கட்சி உடன்படாது. இது விடயத்தில் எமது கட்சியின் கொள்கை மாறவில்லை. இரட்டை நிலைப்பாட்டிலும் நாம் இல்லை. இது சம்பந்தமாக அரசுடன் பேச்சு நடத்தவும் தயாராக உள்ளோம். யோசனைகளும் முன்வைக்கப்படும்' - என்றார். (அ-ஒ,44)

## விபத்தில்...

ஆசிரியை ஒருவர், யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் உப அதிபரும், பிரபல தமிழ் ஆசிரியருமான ஜீவரஞ்சினி (ஜீவா ரீச்சர்) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த சனிக்கிழமை இரவு கிளிநொச்சியிலிருந்து கணவருடன் மோட்டார் சைக்கிளில் வட்டக்கச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். கிளிநொச்சி நகர் ஏ-9 வீதியில் காக்கா கடைச் சந்தியால் வட்டக்கச்சிக்கு திரும்பும்போது எதிர்ப்பக்கம் வந்த காருடன் மோதியதில் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். (அ-ஒ,113,214)

## சிங்களவர்களுக்கு...

சிங்கள - பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதே முரணானது. தமிழ் - பௌத்தர்களே இங்கு வாழ்ந்துள்ளனர் என்பதே உண்மை - இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெள விமலசாரநாயக்க



தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் குருந்தூர்மலை தொடர்பான ஊடக சந்திப்பொன்று வவுனியா சிறிபோதி தக்சனாராமய விகாரையில் நேற்று இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை. மாறாக பாதுகாப்பே இருந்தது. விடுதலைப் புலிகள் நாங்கள் அணிந்திருந்த காவி உடைக்கு தந்த மரியாதைதான் காரணம்.

தெற்கில் சம்பந்தமே இல்லாமல் சிங்கள - பௌத்த கிராமத்துக்குள் கிறிஸ்தவ மத குருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் ஆலயம் எனக்கூறி உரிமை கொண்டாடினால் சிங்கள- பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா? அவ்வாறிருக்கும்போது தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர்மலையில் பிக்கு ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்?

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது. சிங்கள பௌத்த என்றில்லாமல் நாங்கள் இலங்கையர்கள் யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு சிந்திக்கவேண்டும். மேலும், ஒரு சிலர் இவ்விடயத்தை அரசியலாக்கி இனங்களுக்கிடையிலான முறுகலை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர். தொல்பொருள் இடத்தின் முழுப் பொறுப்பையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ளவேண்டும். இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக்கூடாது - என்றார்.

இதேவேளை அரசியல்வாதிகள் இனமுரண்பாட்டை தூண்டுகின்றனரே என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, பைத்தியக்காரர்கள் அவ்வாறுதான் பேசுவார்கள். அவர்கள் தொடர்பில் கவலைகொள்ள வேண்டாம். அவ்வாறானவர்கள் இங்கும் உள்ளார்கள். அங்கும் உள்ளார்கள். இவர்கள் தேர்தல் வரும்போது மாத்திரமே இது குறித்துப் பேசுவார்கள். எனவே அந்தப் பைத்தியக்காரர்கள் குறித்துக் கருத்திற்கொள்ளத் தேவையில்லை - என்றார்.

இச் சந்திப்பில், நாகதீப ராஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய தவத கல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமணதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன், ஓமந்தை பங்குத் தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாக பூஷணி அம்மன் ஆலய பிரதம குரு பிரம்மசிறி பூ. முகுந்தன்சர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-ஒ,110)

## கைதிகள்...

பிட்டிய போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழப்புக்கான காரணம் குறித்து கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் நிபுணர்கள் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விபத்தில் குடும்பத்தலைவர் பரிதாபமாக உயிரிழப்பு



மன்னார், ஓக. 22

தலைமன்னார் - மன்னார் வீதியில் பயணித்த இரு வாகனங்கள் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தலைமன்னார் ஊர்மனையைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தையின் தந்தையான லோறன்ஸ் மனோகரன் நிசாந்தன் (வயது -32) என்பவரே விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் தலைமன்னார் -மன்னார் பிரதான வீதியில் தலைமன்னார் பொலிஸ் பிரிவான பருத்திப்பண்ணையில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மனோகரன் நிசாந்தன் என்பவர் பேசாலையிலிருந்து தனது மோட்டார் சைக்கிளில் தனது கிராமமான தலைமன்னார் ஊர்மனைக்கு பயணித்துக் கொண்டிருந்தபொழுது வெளி மாவட்டத்திலிருந்து சுற்றுலா வந்த டொல்பின் ரக வாகனம் தலைமன்னார் ஊர்மனையிலிருந்து மன்னாருக்கு வந்த பொழுதே இரண்டு வாகனங்களும் மோதி இவ்விபத்து நேரிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-60)

# அராலியில் வீடொன்று எரிந்து சாம்பராகியது



யாழ்ப்பாணம், ஓக். 22

அராலி மத்தியிலுள்ள வீடு நேற்று தீயில் முழுமையாக எரிந்து சாம்பராகியுள்ளது.

வீட்டில் இருந்த 2 அலுமாரிகள், 5 கதிரைகள், ஒரு தொலைக் காட்சி பெட்டி, ஒரு துவிச்சக்கர வண்டி, ஒரு மேசை, உடைகள், ஒலிபெருக்கி சாதனங்கள், தங்க ஆபரணங்கள், ஒரு தொகைப் பணம் உள்ளிட்டனவும் இதன் போது தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

வீட்டின் உரிமையாளர் வேலைக்குச் சென்றிருந்த நிலையில், அவரது மனைவி சமையலை முடித்துவிட்டு, அருகில் உள்ள கணவனின் தாயார் வீட்டுக்குச் சென்றுள்ளார். இந்த நேரத்திலேயே வீடு தீப்பற்றி எரிந்துள்ளது. தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ.27)


## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp (CS 51608) AH-1

0044 7578 626565, 077 251 9150

Email add: rajasasikumar@gmail.com

## கடை விற்பனைக்கு

வண்ணார் பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670 (CS 51741) AH-1

## தேவை

கொக்குவிலில் உள்ள தனியார் அலுவலகம் ஒன்றுக்கு கணினியில் **தமிழ் / ஆங்கிலம் தட்டச்சு** செய்யக்கூடிய (Computer Typing- Tamil / English ) ஓரளவு நல்ல **ஆங்கில அறிவுள்ள** பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு:-077 138 6601 (CS 61739) AH-1

## DHL வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை



**மிகக் குறைந்த கட்டணத்தில்**

UK - 400/=, Canada - 1000/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்** T.P: 0777 55 45 28

321, K.K.S. Road, Jaffna.

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

1. **மனேஜர்** - Lanka Tile Showroom - ஆண், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்.
2. Lanka Tile **விற்பனையாளர்** - ஆண்
3. **விற்பனை பிரதிநிதி** சீமெந்து - ஆண்
4. **கணக்குப்பதிவாளர்** - ஆண் / பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.

தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **குரு ஹாட்வெயார்**

**இல. 175, கரடிபோக்குச் சந்தி - கிளிநொச்சி.**

**0777 435 265** (CR 40437) A-1

குறிப்பு:

பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது. நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றவுள்ள தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **08 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* **நிலப்பரப்பு**
* மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
* பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
* நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
* பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
* நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

**தொடர்பு: 076 057 0354, 076 8260 354** (CS 25983) A-1


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 - 05 - 1936

இறப்பு 02 - 09 - 2022

## அரியரத்தினம் செல்வரத்தினம்

திதி: ஆவணித்திங்கள் வளர்பிறை ஸப்தமி (23.08.2023)

அப்பா நீங்கள் ஆவணித் திங்கள் வளர்பிறை ஸப்தமி திதியில் எமைவிட்டுப் பிரிந்து விண்ணுலகம் சென்றுவிட்டீர்கள்.
23.08.2023 இல் உங்கள் நினைவுநாள் வந்தாலும் நாம் உங்களை ஒரு நிமிடமும் மறந்ததில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

மகன்மார், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

ஜெகதீஸ்வரன் - 0033 660 81 6705, 074 255 0384

ஜெயானந்தன் - 077 633 9468


## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் நுணாவில் காப்பற் வீதி முகப்புடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* A9 வீதியில் இருந்து கனகம்புளியடி சந்தி செல்லும் பிரதான காப்பற் வீதி.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் மட்டுவில் மகா வித்தியாலயம் 1 km தூரம்.
* குடியிருப்பு சூழல் கொண்ட தொகுதி.

தொடர்பு:-

**077 63 85 683**

**076 75 58 606** (CS 26039) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **42 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு**

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு

**077 8743 204, 077 2880 152, 077 076 0389** (CS 26031) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org